# தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நம்மை மாற்றி மேன்மை அடைய வைக்கிறார்

**ஜெபம்:** "அன்பான பிதாவே! உம்மை, குழந்தைகள், மேலும் நன்கு அறிந்து கொள்ள இந்தப் பாடத்தின் மூலம் உதவுவீராக. உமது பரிசுத்த ஆவியானவர் அவர்களை மாற்றி அவர்களுக்கு வழிகாட்டும் வண்ணம் இதை உபயோகிப்பீராக."

குழந்தைகளின் தேவைக்கும் அந்தந்தப் பகுதி பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற செயல்பாட்டைத் தெரிந்து கொள்க.

அப். 6:8-15, 7:51-60 ல் உள்ள ஸ்தேவானின் தியாக மரணத்தைப் பற்றிய கதையை வாசித்து **இந்தப் பாடத்தை ஆயத்தம் செய்க.** தேவ ஆவியானவர் எவ்வாறு ஸ்தேவானை கிறிஸ்துவுக்காக ஒரு துணிவுள்ள சாட்சியாக மாற்றினார், ஸ்தேவான் என்ன கூறினார், யூத தலைவர்களின் எதிர்செயல் என்ன என்பதைக் காண்க.



கதையைக் கூற ஒரு **பெரிய பிள்ளையை தயார் செய்யவும்.** பின் **கேள்விகளைக்** குழந்தைகளிடம் கேட்கவும்:

- ஸ்தேவான் எப்படிப்பட்ட மனிதன்?
- ஸ்தேவானைப் பற்றி பொய் கூறுமாறு ஏன் சில தலைவர்கள் மக்களை வற்புறுத்தினர்?
- மரிப்பதற்கு முன் ஸ்தேவானின் முகம் பார்ப்பதற்கு எவ்வாறு இருந்தது?
- ஸ்தேவானிடம் சில மக்கள் ஏன் மிகவும் கோபம் கொண்டனர்?
- ஸ்தேவானின் கடைசி வார்த்தைகள் என்ன?

**தவறாகக் குற்றம்சாட்டப்படும் போது எழும் வேதனை:**

- தாங்கள் செய்யாத ஒன்றை செய்ததாகக் கூறி சிலர் பொய் கூறிய ஒரு நேரத்தை நினைத்துப் பார்க்குமாறு பிள்ளைகளிடம் கூறவும்.
- தவறாகக் குற்றம்சாட்டப்பட்டபோது அவர்கள் எவ்வாறு உணர்ந்தனர்? என்ன செய்தனர்?

ஸ்தேவானின் தியாக மரணத்தை **நாடகமாக்குக.** ஒத்திகை பார்த்து ஆராதனையின் போது பெரியவர்களுக்கு நடித்துக்காட்டவும். பெரிய பிள்ளைகள், **சவுல், ஸ்தேவான்** பாகங்களையும், சிறுவர்கள் **எதிர்த்து வாதாடுபவர்களாகவும்** நடிக்கட்டும்.

**சவுல்** : "நான்தான் அப்போஸ்தலனாகிய பவுல். நான் கிறிஸ்துவை அறியாத போது பார்த்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். அப்போது நான் "சவுல்" என்று அழைக்கப்பட்டேன்." (அப். 6:8-11 (முதல் பகுதி) ஐ வாசிக்கவும்.

**ஸ்தேவான்:** (ஒரு புறம் நிற்கவும்).

**குற்றம் சாட்டுபவன் - 1 :** (ஸ்தேவானை சுட்டிக் காட்டி கோபத்துடன் கத்துகிறான்) "மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக ஸ்தேவான் நிந்தனையாகப் பேசியதை நாங்கள் கேட்டோம்!"

**சவுல்** : (அப். 6:12-13 (முதல் பகுதி வாசிக்கவும்)

**குற்றம் சாட்டுபவன் 2:** (அப். 6:13-14 ல் உள்ள குற்றச்சாட்டை கோபமாக சத்தம் போட்டு கூறுதல்)

**சவுல்** : (அப். 6:15, 7:1 ஐ வாசித்தல்)

**ஸ்தேவான்:** (அப். 7:2-3 ல் உள்ள ஸ்தேவானின் வார்த்தைகளை வாசிக்கவும்)

**சவுல்** : "இஸ்ரவேலின் வரலாற்றை ஸ்தேவான் சுருக்கமாகக் கூறுகிறான்."

**ஸ்தேவான்:** (அப். 7:51-52)

**சவுல்** : (அப். 7:54-55)

**ஸ்தேவான்:** (அப். 7:56 ல் உள்ள வார்த்தைகளை வானத்தை சுட்டிக்காட்டி கத்தவும்)

**குற்றம் சாட்டுபவர்:** (ஓடி ஸ்தேவானை அறையின் அடுத்தபக்கம் இழுத்துச் செல்லவும்)

**சவுல்** : (அப். 7:57-58 வாசித்து "சவுல்" நானே என்று விளக்கவும்)

**வாதாடுபவன்:** கல் எறிவது போல் பாவனை

**ஸ்தோவன்:** (அப். 7:59-60)

**குழந்தைகள் பெரியவர்களிடம்** பரிசுத்த ஆவியானவர் ஸ்தேவானை என்ன செய்ய வைத்தார் என்பது குறித்து தாங்கள் தயாரித்த கேள்விகளைக் கேட்கவும். பகுதி 1 ல் உள்ள கேள்விகளை அவர்கள் உபயோகப்படுத்தலாம்.

**சங்கீதம்:** ஏசாயா 61:1-2 ன் மூன்று பகுதிகளை ஒப்புவிக்குமாறு மூன்று சிறுவர்களை ஆயத்தம் செய்க. அவர்கள் பெரியவர்களுக்கு ஒப்புவித்துக் காட்டலாம்.

கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்.
சிறுமைப் பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை
அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்.
இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலையும்,
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,
ஹகட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,
கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தையும்,
நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும்....
அவர் என்னை அனுப்பினார்.

பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை **விவரித்துக் காட்டவும்.**

- ஒரு உடைந்த சங்கிலியின் படத்தை சிறுவர்கள் வரைந்து, பரிசுத்த ஆவியானவரின் கிரியையை விளக்கலாம்.
- வரைந்த படங்களை சிறுவர்கள் பெரியவர்களுக்குக் காட்டி, பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவ வல்லமையால் நிரப்பி, பாவம், தீமை, மரணபயம் ஆகிய விலங்குகளில் இருந்து விடுவிக்கிறார் என்று விளக்கவும்.



**மனன வசனம்:** யோவான் 20:22. பெரிய பிள்ளைகள் எபே. 1:13, 14 ஐ மனப்பாடம் செய்யட்டும்.

ஆவியின் கனிகள் பற்றி **விளக்கவும்.** கலா. 5:19-25 ஐ வாசியுங்கள்

மாம்சத்தின் மோசமான வேலைகளையும் (பாவ காரியங்கள்), மாறாக, பின்னர் பரிசுத்த ஆவி உண்டாக்கும் கனிகளையும், இந்த பட்டியல் படி **விளக்கவும்.**

**மாம்சத்தின் கிரியைகளும் ஆவியின் கனிகளும்**

| | |
|---|---|
| மாம்சத்தின் கிரியைகள்: பாவத்தின் காரணமாக மக்கள் செய்ய விரும்பும் தீய காரியங்கள். கலா. 5:19-21. | ஆவியின் கனிகள்: பரிசுத்த ஆவியானவர் செய்யும்படி உதவும் நற்கிரியைகள். கலா. 5:22-23. |
| விபச்சாரம் வேசித்தனம் தாவீது இன்னொருவனின் மனைவியை விரும்பினான். | அன்பு: தாவீது மனம் திரும்பி, தேவனை உண்மையாக நேசித்தான். 2 சாமு. 11;சங். 51. |
| அசுத்தம், காமவிகாரம்: கெட்ட குமாரன் மோசமாக வாழ்ந்தான். | சந்தோஷம். மனம்திரும்பி வந்தபோது அவன் மகிழ்ச்சியைக் கண்டடைந்தான், லூக் 15:11-32. |
| விக்கிரக ஆராதனை, பில்லி சூனியம்: எஸ்ராவின் ஜனங்கள் மடத்தனமான விக்கிரகங்களிடம் சமாதானத்தை நாடினர். | சமாதானம்: தேவனிடம் சமாதானத்தைக் காண எஸ்ரா யூதர்களுக்கு உதவினார், எஸ்ரா 9. |
| பகைகள்: சவுல் விசுவாசிகளை வெறுத்து துன்புறுத்தினான். | நீடிய பொறுமை: மோசமான நடத்துதலை பொறுத்துக் கொள்ள பவுல் கற்றுக் கொண்டார், அப்.9. |
| விரோதங்கள், வைராக்கியங்கள்: யூதா பொறாமையால் தன் சகோதரன் யோசேப்பை அடிமையாக விற்றான். | தயவு: யூதா பின்னர் பெரும் தயவு காட்டினான் ஆதி.37,44. |
| கோபங்கள் யோவான் தன் விரோதிகளை அழிக்க நெருப்பை விரும்பினார். | நற்குணம்: யோவான் பின்னர் பெரிதும் நற்குணம் காட்டினார் யோவான் 9:54. |
| (சுயநல) சண்டைகள்: யாக்கோபு ஏசாவை ஏமாற்றி சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றான். | விசுவாசம்: தேவனை நம்பி உதவிகளைப் பெற யாக்கோபு கற்றுக் கொண்டான் ஆதி.25:29-34 & அத்.27 & 47. |
| பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள்: அந்தியோகியாவில் இருந்த விசுவாசிகளிடம் பிரிவினைகள். | சாந்தம்: அந்தியோகியா விசுவாசிகள் ஒற்றுமையைக் கண்டடைந்தனர். அப்.15. |
| வெறிகள், களியாட்டுகள்: கொரிந்து மக்களிடம் இவை இருந்தன. | தன் அடக்கம்: கொரிந்து சபையார் கழுவப்பட்டு பரிசுத்த ஆவியால் பரிசுத்தம் ஆக்கப்பட்டனர். கொரி.6:9-11. |

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net